# பணமும் வங்கித் தொழிலும்

## பணநிரம்பல்


தொடர்ந்தும் இரண்டாவது ஆண்டாக நாணயக் கூட்டுக்களில் ஏற்பட்ட தொடர்ச்சியான மெதுவான போக்கின் மூலம் 1983 ஆம் ஆண்டுப் பகுதியில் காணப்பட்ட நாணய அபிவிருத்திகளின் பண்பு விரித்துரைக்கப்படுகிறது. அரசிற்கான தேறிய கொடுகடனில் ஏற்பட்ட கூடியளவு அதிகரிப்பு, தனியார்துறைக்கான கொடுகடனில் ஏற்பட்ட மிதமான அதிகரிப்பு, மற்றும் வங்கித் தொழில்முறையின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களில் ஏற்பட்ட வீழ்ச்சி ஆகியனவற்றைக் கொண்ட பின்னணிக்கு எதிராக இது இடம் பெற்றது. இவ்வாண்டில் பொது மக்களால் வைத்திருக்கப்படும் நாணயம், கேள்வி வைப்புக்களை உள்ளடக்கியுள்ள குறுகிய பணநிரம்பல் ($M_1$) 1984 இன் ரூ. 20,760 இலட்சம் அல்லது 14 சதவீதம் கொண்ட அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் ரூ. 19,370 இலட்சம் அல்லது 12 சதவீதத்தினுல் அதிகரித்தது. அதேவேளை வர்த்தக வங்கிகளுடன் வைத்திருக்கப்படும் தனியார்துறையின் தவணை, சேமிப்பு வைப்புக்கள் (போலி நாணயம்) ரூ. 30,440 இலட்சத்தினுல் அல்லது 11 சதவீதத்தினுல் உயர்வடைந்தது. 1984 இல் போலி நாணயம் ரூ. 40,950 இலட்சத்தினுல் அல்லது 18 சதவீதத்தினுல் வளர்ச்சியடைந்தது. இதன் விளைவாக $M_1$ ஐயும் போலி நாணயத்தையும் உள்ளடக்கியதான விரிந்த பணநிரம்பல்$M_2$ 1985 இல் ரூ. 49,820 இலட்சத்தினுல் அல்லது 11 சதவீதத்தினுல் அதிகரித்தது. 1984 இல் $M_2$ இன் வளர்ச்சி ரூ. 61,710 இலட்சத்தில் அல்லது 17 சதவீதத்தில் மிக உயர்வாக இருந்தது.

1985 இல் $M_1$ இல் ஏற்பட்ட மெதுவான போக்கு பொதுமக்களால் வைத்திருக்கப்பட்ட நாணயம், கேள்வி வைப்புக்கள் இரண்டிலும் பிரதிபலிக்கப்பட்டது. சுற்றோட்டத்திலுள்ள நாணயம் ரூ. 12,550 இலட்சம் அல்லது 15 சதவீதத்தினுல் அதிகரித்தவிடத்து இது 1984 இல் ரூ. 13,610 இலட்சத்தினுல் அல்லது 19 சதவீதத்தினுல் உயர்வடைந்தது. நாணயத்தில் மிக உயர்ந்த மாதாந்த அதிகரிப்பு (12 சதவீதம்) மாச்சில் பதிவு செய்யப்பட்டது. இவ்வதிகரிப்பிற்கு ஏப்பிறல் பண்டிகைக் காலத்திற்கு முன்னதாகக் காசு நிலுவைக்கான பருவகாலக் கேள்வி காரணமாகும். 1985 இல் பொது மக்களால் வைத்திருக்கப்பட்ட கேள்வி வைப்புக்கள் ரூ. 6,830 இலட்சத்தினுல் அல்லது 8 சதவீதத்தினுல் மிதமாக அதிகரித்தது. 1984 இல் இவ்வதிகரிப்பு ரூ. 7,150 இலட்சம் அல்லது 9 சதவீதமாக இருந்தது. $M_1$ இல் கேள்வி வைப்புக்களின் பங்கு 1984 இன் 49 சதவீதத்திலிருந்து 1985 இல் 48 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

முழுமையான நியதிகளில், போலி நாணயம் ரூ. 30,440 இலட்சங் கொண்ட அதிகரிப்பொன்றினைப் பதிவு செய்தபோதிலும் வளர்ச்சி வீதம் 1984 இன் 18சதவீதத்திலிருந்து 1985 இல் 11 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. சார்பு ரீதியில் குறைந்த வீத வளர்ச்சிக்குப் பல தடவைகள், வர்த்தக வங்கிகளினுல் தவணை, சேமிப்பு வைப்பு வீதங்கள் கீழ் நோக்கித் திருத்தியமைக்கப்பட்டமையும், இவ்வாண்டுக் காலத்தில் வெளிநாட்டு வருவாய்களில் ஏற்பட்ட வீழ்ச்சியுடன் இணைந்து வருமானத்தில் ஏற்பட்ட குறைந்த வளர்ச்சியும் பெருமளவு காரணங்களாகும். போலி நாணயத்தில் ஏற்பட்ட மெதுவான போக்கிற்கு ரூ. 3,010 இலட்சம் அல்லது 6 சதவீதத்தினுல் மாத்திரமே அதிகரித்த கூட்டுத்தாபனங்களின் வைப்புக்களே பெருமளவு காரணமாகும். ஒப்பிடுகையில் 1984 இல் இவ்வதிகரிப்பு ரூ. 14,280 இலட்சம் அல்லது 35 சதவீதமாக இருந்தது. இதற்கு முக்கிய

## பண நிரம்பல்

மாதாந்தம்




இலங்கை மத்திய வங்கி

UNIVERSITY OF MORATUWA LIBRARY SRI LANKA

## அட்டவணை 1.43

## நாணயக்கூட்டுக்கள் 1983—1985

பத்து இலட்சம் ரூபாய்களில்

| கால முடிவில் | குறுகிய பண நிரம்பல் ($M_1$) | | | | | | விரிந்த பண நிரம்பல் ($M_2$) | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1983 | 1984 | 1985 | 1982 ஐவிட 1983 இல் சதவீதம் மாற்றம் | 1983 ஐவிட 1984 இல் சதவீதம் மாற்றம் | 1984 ஐவிட 1985 இல் சதவீதம் மாற்றம் | 1983 | 1984 | 1985 | 1982 ஐவிட 1983 இல் சதவீதம் மாற்றம் | 1983 ஐவிட 1984 இல் சதவீதம் மாற்றம் | 1984 ஐவிட 1985 இல் சதவீதம் மாற்றம் |
| சனவரி ... | 11,852 | 14,964 | 16,522 | + 7.3 | + 26.3 | + 10.4 | 30,802 | 38,277 | 43,923 | + 14.5 | + 24.3 | + 14.8 |
| பெப்புருவரி ... | 12,234 | 14,939 | 16,595 | + 9.4 | + 22.1 | + 11.1 | 31,708 | 39,031 | 44,849 | + 18.5 | + 23.1 | + 14.9 |
| மாச்சு ... | 12,986 | 15,439 | 17,237 | + 11.2 | + 18.9 | + 11.7 | 32,874 | 39,762 | 45,230 | + 16.4 | + 21.0 | + 13.8 |
| ஏப்பிறல் ... | 12,842 | 15,317 | 17,332 | + 13.9 | + 19.3 | + 13.2 | 33,114 | 39,629 | 46,019 | + 16.6 | + 19.7 | + 16.1 |
| மே ... | 12,606 | 14,331 | 17,208 | + 13.2 | + 13.7 | + 20.1 | 32,491 | 39,133 | 46,092 | + 11.5 | + 20.4 | + 17.8 |
| யூன் ... | 12,589 | 14,768 | 17,339 | + 16.4 | + 17.3 | + 17.4 | 32,798 | 39,690 | 46,233 | + 14.1 | + 21.0 | + 16.5 |
| யூலை ... | 12,964 | 14,901 | 16,969 | + 21.1 | + 14.9 | + 13.9 | 33,846 | 39,642 | 46,631 | + 18.9 | + 17.1 | + 17.6 |
| ஓகத்து ... | 12,977 | 14,811 | 17,232 | + 19.1 | + 14.1 | + 16.4 | 33,732 | 39,767 | 46,991 | + 18.4 | + 17.9 | + 18.2 |
| செத்தெம்பர் ... | 13,322 | 15,549 | 17,460 | + 19.3 | + 16.7 | + 12.3 | 34,620 | 40,808 | 47,917 | + 16.2 | + 17.9 | + 17.4 |
| ஒற்றோபர் ... | 13,572 | 16,041 | 17,768 | + 18.9 | + 18.2 | + 10.8 | 35,314 | 41,586 | 48,359 | + 17.1 | + 17.8 | + 16.3 |
| நவெம்பர் ... | 13,544 | 15,678 | 18,187 | + 18.3 | + 15.8 | + 16.0 | 35,324 | 42,007 | 47,247 | + 18.3 | + 18.9 | + 12.5 |
| திசெம்பர் ... | 14,748 | 16,824 | 18,761 | + 25.4 | + 14.1 | + 11.5 | 37,257 | 43,427 | 48,409 | + 22.1 | + 16.6 | + 11.4 |
| மாதாந்த சராசரி ... | 13,020 | 15,297 | 17,384 | + 16.1 | + 17.5 | + 13.7 | 33,657 | 40,230 | 46,492 | + 16.9 | + 19.5 | + 15.6 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

காரணம் தேயிலை விலைகள் வீழ்ச்சியடைந்தமையின் விளைவாக இரு பெருந் தோட்டக் கூட்டுத்தாபனங்களினதும் அத்தகைய வைப்புக்களில் வீழ்ச்சியேற் பட்டமையேயாகும். அதேவேளை தனியார் துறைக் கூறுகளின் வைப்புக்களும் வீழ்ச்சியடைந்தன. இவ்வாறிருந்துங்கூட $M_2$ இல் உள்ள தவணை சேமிப்பு வைப்புக்களின் பங்கு 61 சதவீதத்தில் மாற்றமின்றியிருந்தது.

வெளிநாட்டு வங்கித்தொழில் சொத்துக்களில் (தேறிய) ஏற்பட்ட வீழ்ச்சியின் பின்னணியில் 1985 இல் பணநிரம்பலின் வளர்ச்சியின் மிகக் குறிப்பிடத்தக்க காரணியாக உள்நாட்டுக் கொடுகடனில் ஏற்பட்ட கணிசமான வளர்ச்சி காணப் பட்டது. அரசிற்கான தேறிய கொடுகடனில் ஏற்பட்ட அதிகரிப்பு உள்நாட்டுக் கொடுகடனின் அதிகரிப்பிற்குப் பெருமளவிற்கு வகை கூறியது. அரசிற்கான தேறிய கொடுகடன் 1984 இன் ரூ. 29,790 இலட்சம் அல்லது 17 சதவீதம் கொண்ட வீழ்ச்சிக்கு எதிராக ரூ. 61,370 இலட்சம் அல்லது 42 சதவீதத்தினுல் மிகக் கூடியளவில் அதிகரித்தமை இங்கு குறிப்பிடத்தக்கதொரு விடயமாகும். இதன் விளைவாக மொத்த உள்நாட்டுக் கொடுகடனில் அரசிற்கான தேறிய கொடுகடன் 1984 இன் 29 சதவீதத்திலிருந்து 1985 இல் 35 சதவீதத்திற்கு உயர்வடைந்தது. அரசுக்கான தேறிய கொடுகடனில் ஏற்பட்ட அதிகரிப்பு அரசிற் கான மொத்தக் கொடுகடன் ரூ. 78,370 இலட்சத்தினுல் (43 சதவீதம்) அதிகரித்தமை, அரசின் வைப்புக்களும் காசு நிலுவைகளும் ரூ. 17,000 இலட் சத்தினுல் (47 சதவீதம்) அதிகரித்தமை ஆகியவற்றின் தேறிய விளைவாகும். மத்திய வங்கியிலிருந்தான அரசின் கடன்பாடுகள் 1984 இன் ரூ. 41,440 இலட்சம் அல்லது 21 சதவீதங் கொண்ட வீழ்ச்சிக்கு மாருக ரூ. 75,120 இலட்சம் அல்லது 49 சதவீதத்தினுல் அதிகரித்தது. இதற்கு முக்கியமாகத் தற் காலிக முற்பணங்கள் (ரூ. 1,740 இலட்சம்) அரச, அரச உத்தரவாதப் பிணைகள் முக்கியமாகத் திறைசேரி உண்டியல் உடமைகள் (ரூ. 73,370 இலட்சம்) ஆகிய வற்றில் ஏற்பட்ட அதிகரிப்புக்கள் காரணமாகும். வர்த்தக வங்கிகளின் அரசிற் கான கொடுகடன் 1984 இன் ரூ. 13,360 இலட்சம் அல்லது 85 சதவீதம் கொண்ட அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் ரூ. 3,260 இலட்சம் அல்லது 11 சத வீதத்தினுல் உயர்வடைந்தது.

அரசு, வங்கிக்கான கொடுகடனை அதிகளவிற்கு நாடியமைக்கு முக்கிய காரணம் தேயிலைப் பெறுமான விகித வரி, மொத்த விற்பனை வரி, ஏற்றுமதித் தீர்வைகள் என்பனவற்றில் ஏற்பட்ட வீழ்ச்சியின் காரணமாக அரசிறைச் சேகரிப் புக்கள் மதிப்பிடப்பட்ட அரசிறையுடன் ஒப்பிடுகையில் குறிப்பிடத்தக்களவில் குறைவடைந்தமையேயாகும். மறுபுறத்தில் உயர்ந்து செல்லும் பாதுகாப்புச் செலவினங்களின் முக்கிய காரணமாக இவ்வாண்டுக் காலத்தில் அரச செலவினம் தொடர்ந்தும் உயர்ந்தது.

1985 ஆம் ஆண்டில் தனியார் துறைக்கான மொத்தக் கொடுகடன் 1984 இன் ரூ. 36,120 இலட்சம் அல்லது 11 சதவீதங் கொண்ட அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் ரூ. 31,630 இலட்சம் அல்லது 9 சதவீதத்தினுல் உயர்வடைந்தது. 1984 மாச்சிலும், மேயிலும் விதிக்கப்பட்ட கொடுகடன் எல்லை தொடர்ந்து இருந்தமையும், பணவீக்க வீதத்தில் ஏற்பட்ட மெதுவான போக்கின் காரணமாகப் பெயரளவு நியதிகளில் கொடுகடனுக்கான குறைந்த கேள்வியும், தனியார்துறைக் கான மொத்தக் கொடுகடனில் வீழ்ச்சியை விளைவித்தது. ஏனைய தனியார்துறைக் கூறுகளுக்கான வங்கிக் கொடுகடன், கடன்கள் (20,900 இலட்சம்), மேலதிகப் பற்றுக்கள் (ரூ. 6,890 இலட்சம்), இறக்குமதி உண்டியல்கள் (ரூ. 1,330 இலட்

சம்) ஆகிய வடிவில் இருந்தன. கூட்டுறவு நிறுவனங்களுக்கான கொடுகடன் 1984 இன் ரூ. 2,550 இலட்சம் அல்லது 14 சதவீதங் கொண்ட வீழ்ச்சியைத் தொடர்ந்து ரூ. 2,630 இலட்சம் அல்லது 17 சதவீதத்தினுல் வீழ்ச்சியடைந்தது. இதற்கு நெற்சந்தைப்படுத்தும் சபையின் குறைந்த சந்தைப்படுத்தல் தொழிற்பாடுகளும், 1984/85 பெரும்போகம், 1985 சிறுபோகம் ஆகிய பருவகாலங்களில் அனைத்தையும் உள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட பயிர்ச்செய்கைக் கடன்கள் குறைவடைந்தமையும் முக்கிய காரணங்களாக விளங்கின.


அரச கூட்டுத்தாபனங்களுக்கான கொடுகடன் 1984 இன் ரூ. 2,370 இலட்சம் அல்லது 6 சதவீதங் கொண்ட வீழ்ச்சிக்கு மாருக 1985 இல் ரூ. 2,900 இலட்சத்தினுல் அல்லது 7 சதவீதத்தினுல் அதிகரித்தது. இது முக்கியமாக இலங்கைப் பெற்ருேலியக் கூட்டுத்தாபனம், கூட்டுறவு மொத்த விற்பனவு நிலையம், அரச வர்த்தக கூட்டுத்தாபனம், இரு அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனங்கள் (மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபை, அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்) ஆகியனவற்றின் உயர்ந்தளவு கடன்பாடுகளினுல் ஏற்பட்டதாகும். இவ்வதிகரிப்பு குறிப்பாக 1985 இன் இரண்டாம் காற்பகுதியில் பெருந்தோட்டக் கூட்டுத்தாபனங்களின் தேயிலை வருவாய் வீழ்ச்சியடைந்தபோதும் இலங்கைப் பெற்ருேலியக் கூட்டுத்தாபனத்தின் நிதியிடல் வெளிநாட்டிலிருந்து உள்நாட்டு மூலங்களுக்கு மாற்றப்பட்டமையின் விளைவாக வர்த்தக வங்கிகளிலிருந்து பெருமளவு கடன்பாடுகளுக்கு வழி வகுத்தபோதும் மிகக் கூடியளவில் காணப்பட்டது.

கடந்த இரண்டு ஆண்டுகளில் அவதானிக்கப்பட்ட போக்கிற்கு மாருக 1985 இல் நாணயக் கூட்டுக்களின் மீது வெளிநாட்டுத்துறை கணிசமான சுருக்கத் தாக்கத்தை ஏற்படுத்தியது. வெளிநாட்டு வங்கித்தொழில் சொத்துக்கள் (தேறிய) 1984 இன் ரூ. 67,770 இலட்சம் அல்லது 213 சதவீதங் கொண்ட மிகக் கூடியளவு அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் ரூ. 6,910 இலட்சம் அல்லது 7 சதவீதத்தினுல் வீழ்ச்சியடைந்தது. முன்னர் குறிப்பிட்டவாறு, தேயிலை விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சியும் சுற்றுலாவிலிருந்தான பெறுகைகள் குறைவடைந்தமையும் வெளிநாட்டுச் சொத்துக்களில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு முக்கிய பொறுப்பாக இருந்தன.

முன்னைய ஆண்டினைப் போன்றே உள்நாட்டு விலை மட்டங்கள் வரவேற்கத்தக்க மெதுவான போக்கினைப் பதிவு செய்தமையின் மூலம் ஆண்டு முழுவதும் பணவீக்க வீதம் குறைவாக இருந்தது. கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் 1985 இல் 1.5 சதவீதத்தினுல் மாத்திரம் அதிகரித்தது. வேளாண்மைப் பண்டங்களின் வழங்கல் நிலைமையில் ஏற்பட்ட முன்னேற்றம் மத்திய வங்கியினுல் மேற்கொள்ளப்பட்ட முகாமைக் கொள்கை வழிமுறைகளுடன் இணைந்து பொருளாதாரத்தின் பொதுவான விலை மட்டம் வீழ்ச்சியடைவதற்கு வழியமைத்தது.

## உள்நாட்டுக் கொடுகடன்

மாதாந்தம்




இலங்கை மத்திய வங்கி

## அட்டவணை 1.44

### நாணயக் கூட்டுக்களும் ஏதுக்காரணிகளும்

தொகை பத்து இலட்சம் ரூபாய்களில்

| விடயம் | 1983 திசெம்பர் | 1984 திசெம்பர் | 1985 திசெம்பர் | மாற்றம் 1983/1984 | | மாற்றம் 1984/1985 | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | தொகை | சதவீதம் | தொகை | சதவீதம் |
| **நாணயக் கூட்டுக்கள்** | | | | | | | |
| 1. மக்களால் வைத்திருக்கப்பட்ட நாணயம் ... | 7,200.1 | 8,560.9 | 9,815.5 | + 1,360.8 | + 18.9 | + 1,254.6 | + 14.7 |
| 2. மக்களால் வைத்திருக்கப்பட்ட கேள்வி வைப்புக்கள் ... | 7,547.8 | 8,262.9 | 8,945.5 | + 715.2 | + 9.5 | + 682.6 | + 8.3 |
| குறுகிய பண நிரம்பல் (M1) ... | 14,747.9 | 16,823.8 | 18,761.0 | + 2,076.0 | + 14.1 | + 1,937.2 | + 11.5 |
| 3. வர்த்தக வங்கிகளில் தனியார்துறை வைத்திருக்கும் தவணை சேமிப்பு வைப்புக்கள் ... | 22,509.0 | 26,603.5 | 29,647.9 | + 4,094.5 | + 18.2 | + 3,044.4 | + 11.4 |
| 3.1 கூட்டுறவு நிறுவனங்கள் ... | 469.2 | 526.8 | 633.5 | + 57.6 | + 12.3 | + 106.7 | + 20.3 |
| 3.2 அரச கூட்டுத்தாபனங்கள் ... | 4,081.1 | 5,508.8 | 5,809.5 | + 1,427.7 | + 35.0 | + 300.7 | + 5.5 |
| 3.3 ஏனைய தனியார்துறை வாடிக்கையாளர்கள்* ... | 17,958.7 | 20,567.9 | 23,204.9 | + 2,609.2 | + 14.6 | + 2,637.0 | + 12.8 |
| **விரிந்த பண நிரம்பல் (M2)** ... | **37,256.9** | **43,427.3** | **48,408.9** | **+ 6,170.5** | **+ 16.6** | **+ 4,981.6** | **+ 11.4** |
| **ஏதுக்காரணிகள்** | | | | | | | |
| 1. உள்நாட்டுக் கொடுகடன் ... | 49,293.0 | 49,926.2 | 59,226.1 | + 633.2 | + 1.3 | + 9,299.9 | + 18.6 |
| 1.1 அரசிற்கு வழங்கப்பட்ட தேறிய கொடுகடன் ... | 17,533.1 | 14,554.4 | 20,691.4 | — 2,978.7 | — 17.0 | + 6,137.0 | + 42.2 |
| 1.1.1 அரசிற்கு வழங்கப்பட்ட மொத்தக் கொடுகடன் ... | 20,972.1 | 18,164.6 | 26,001.7 | — 2,807.5 | — 13.4 | + 7,837.1 | + 43.1 |
| மத்திய வங்கியால் ... | 19,393.0 | 15,249.1 | 22,760.6 | — 4,143.9 | — 21.4 | + 7,511.5 | + 49.3 |
| வர்த்தக வங்கிகளால் ... | 1,579.1 | 2,915.5 | 3,241.1 | + 1,336.4 | + 84.7 | + 325.6 | + 11.2 |
| 1.1.2 அரசின் வைப்புக்களும் காசு நிலுவைகளும் ... | — 3,439.0 | — 3,610.2 | — 5,310.3 | — 171.2 | — 5.0 | — 1,700.1 | — 47.1 |
| 1.2 தனியார்துறைக்கு வழங்கப்பட்ட மொத்தக் கொடுகடன் ... | 31,759.9 | 35,371.8 | 38,534.7 | + 3,611.9 | + 11.4 | + 3,162.9 | + 8.0 |
| 1.2.1 கூட்டுறவு நிறுவனங்கள் ... | 1,822.7 | 1,567.6 | 1,304.3 | — 255.1 | — 14.0 | — 263.3 | — 16.8 |
| 1.2.2 அரச கூட்டுத்தாபனங்கள் ... | 4,385.1 | 4,148.2 | 4,437.9 | — 236.9 | — 5.5 | + 289.7 | + 7.0 |
| 1.2.3 ஏனைய தனியார்துறை வாடிக்கையாளர்கள் ... | 25,552.1 | 29,656.0 | 32,792.5 | + 4,103.9 | + 16.1 | + 3,136.5 | + 10.6 |
| 2. வெளிநாட்டு வங்கித் தொழில் சொத்துக்கள் (தேறிய) ... | 3,186.9 | 9,964.1 | 9,272.7 | + 6,777.2 | + 212.7 | — 691.4 | — 6.9 |
| 3. ஏனைய விடயங்கள் (தேறிய) ... | —15,223.0 | —16,463.0 | —20,089.9 | — 1,239.9 | | — 3,626.9 | |
| 3.1 மத்திய வங்கியின் ஏனைய பொறுப்புக்கள் (தேறிய) ... | — 9,417.4 | — 9,982.6 | —13,197.2 | — 565.2 | | — 3,214.5 | |
| 3.2 வர்த்தக வங்கிகளின் ஏனைய பொறுப்புக்கள் (தேறிய) ... | — 6,319.3 | — 6,506.3 | — 7,186.9 | — 186.9 | | — 680.7 | |
| 3.3 இடைப்போக்கிலுள்ள விடயங்கட்கான சீராக்கங்கள் ... | 513.7 | 25.9 | 294.2 | — 487.8 | | + 268.3 | |
| **விரிந்த பண நிரம்பல்(M2)** ... | **37,256.9** | **43,427.3** | **48,408.9** | **+ 6,170.5** | **+ 16.6** | **+ 4,981.6** | **+ 11.4** |


குறிப்பு: அடையாளங்கள் M2இன் மீது ஏற்பட்ட தாக்கத்தைக் குறிக்கின்றன.

* வதிவற்றோர் வெளிநாட்டு நாணய வைப்புக்கள் தவிர.

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

## வெளிநாட்டு வங்கித்தொழில் சொத்துக்கள் (தேறிய)

மாதாந்தம்




இலங்கை மத்திய வங்கி

**வர்த்தக வங்கித் தொழில்**

வெளிநாட்டுச் சொத்துக்களினுல் உருவாக்கப்பட்ட திரவத்தன்மையில் கணிசமான குறைப்புக் காணப்பட்டபோதும், அரசின் பெருமளவு உள்நாட்டுச் செலவினத்தின் முக்கிய காரணமாக 1985 இல் வர்த்தக வங்கிகளில் மிகையான திரவத்தன்மை காணப்பட்டது. அத்துடன் கொடுகடன் கட்டுப்பாடுகளின் காரணமாக வங்கிகள் முன்னுரிமையற்ற துறைகளுக்குக் கடன் வழங்க இயலாமல் போனமையும், தனியார்துறையின் கொடுகடனுக்கான கேள்வி மந்தநிலையில் இருந்தமையும் மிகையான திரவ நிலைமையை மேலும் அதிகரித்தன.

வங்கிகளுக்கிடையிலான அழைப்புப்பணச் சந்தையிலும், இரண்டாந்தரத் திறைசேரி உண்டியல்கள் சந்தையிலும் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் வர்த்தக வங்கிகளில் நிலவிய மிகையான திரவத்தன்மையை ஓரளவு பிரதிபலித்தது. குறுங்காலக் கொடுகடனுக்கான குறைந்த கேள்வியைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் வங்கிகளுக்கிடையிலான அழைப்புப்பணச் சந்தையின் வெளிநிற்கும் கொடுக்கல் வாங்கல்கள் 1985 இல் கணிசமாக வீழ்ச்சியடைந்தன. இதன்படி இச்சந்தையில் மாதாந்தம் வெளிநிற்கும் கடன் வழங்கல் நிலுவைகள் இவ்வாண்டுக் காலத்தில் ரூ. 1,030 இலட்சத்திற்கும், ரூ. 3,760 இலட்சத்திற்குமிடையில் தளம்பலுற்றது. இதன் விளைவாக 1984 இறுதியில் ஆண்டிற்கு 14 இலிருந்து 15.5 சதவீத வீச்சுகளில் நிலவிய வட்டி வீதங்கள் 1985 இறுதியில் ஆண்டிற்கு 11 இலிருந்து 14 சதவீத வீச்சுகளுக்கு வீழ்ச்சியடைந்தது. அதேவேளை மிகையான நிதிகளை முதலிடுவதற்கு வசதியான துறையாகக் கருதப்படும் இரண்டாந்தரத் திறைசேரி உண்டியல் சந்தையின் கொடுக்கல் வாங்கல்கள் இவ்வாண்டுக் காலத்தில் நியாயமான முறையில் தொழிற்பட்டன. வெளிநிற்கும் தேறிய விற்பனைகள் 1984 இறுதியில் ரூ. 15,630 இலட்சங்களிலிருந்து 1985 செத்தெம்பரில் உச்சமட்டமான ரூ. 38,060 இலட்சங்களுக்கு உயர்வடைந்து 1985 இறுதியில் ரூ. 15,290 இலட்சங்களுக்கு வீழ்ச்சியடைந்தது.

கொடுகடனுக்கான குறைந்த கேள்வியும், கட்டுப்படுத்தப்பட்ட கொடுகடன் கொள்கை வழிமுறைகளும் வர்த்தக வங்கிகளின் சராசரிக் கடன்/வைப்பு வீதம் இவ்வாண்டுக் காலத்தில் 0.85 இற்கும் 0.89 இற்குமிடையில் தளம்பலுறும் தன்மையை விளைவித்தது. இது முன்னைய ஆண்டில் அவதானிக்கப்பட்ட 0.90 இலிருந்து 0.96 வரையிலான வீச்சுகளுடன் ஒப்பிடத்தக்கதாகும்.

1985 இன் பின்னரைப்பகுதியில் வர்த்தக வங்கிகளின் வைப்புச் சான்றிதழ்களுக்கு பெருமளவு கேள்வி காணப்பட்டது. இது 1986 வரவுசெலவுத் திட்டத்தில் நிலையான வைப்புக்களின் மீது பெறப்பட்ட வட்டி வருவாயில் 20 சதவீத தடுத்து வைக்கும் வரி ஒன்று அறிவிக்கப்பட்டதன் தொடக்க எதிர் விளைவாக இருக்கலாம். வைப்புச் சான்றிதழ்களின் வெளிநின்ற தொகை ரூ. 1,680 இலட்சத்தினுல் உயர்ந்து 1985 இறுதியில் ரூ. 10,680 இலட்சங்களை அடைந்தது.

1985 இறுதியில் இலங்கையில் 25 வெளிநாட்டு நாணய வங்கித்தொழில் பிரிவுகள் காணப்பட்டன. 1985 இறுதியில் வெளிநாட்டு நாணய வங்கித்தொழில் பிரிவின் மொத்தச் சொத்துக்கள்/பொறுப்புக்கள் ரூ. 2,080 இலட்சத்தினுல் ரூ. 200,790 இலட்சங்களுக்கு அதிகரித்தபோதும் ஐ.அ. டொலர்களுக்கு எதிராக இலங்கை ரூபா தேய்வடைந்தமையின் காரணமாக ஐ.அ. டொலர் நியதிகளில் அவை சிறிதளவால் வீழ்ச்சியடைந்தன. இவ்வாண்டுக் காலத்தில் வெளிநாட்டு

நாணய வங்கித் தொழில் பிரிவின் தொழிற்பாடுகள் கொழும்பு பெரும்பாகப் பொருளாதார ஆணைக்குழுவினதும் ஏனைய ஒப்புதலளிக்கப்பட்ட வதிவோரினதும் செயற்றிட்டங்களின் நிதியிடலைப் பெருமளவிற்கு உள்ளடக்கியிருந்தது.

மீளாய்விற்குரிய ஆண்டுப் பகுதியில் வர்த்தக வங்கிகளின் மொத்த மூல வளங்கள் முன்னைய ஆண்டின் ரூ. 61,710 இலட்சங் கொண்ட அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் ரூ. 58,300 இலட்சத்தினால் உயர்வடைந்தன. கடந்த காலத்தில் நிலவிய தன்மையை உறுதிப்படுத்துகின்ற விதத்தில் 1985 இன் மூலவள வளர்ச்சியில் கணிசமானதொரு பகுதி (ரூ. 53,610 இலட்சம்) வைப்புப் பொறுப்புக்களின் மூலம் ஏற்பட்டதாகும். இவ்வாண்டுக் காலத்தில் வர்த்தக வங்கிகளின் கடன்பாடுகள் ரூ. 2,630 இலட்சத்தினால் வீழ்ச்சியடைந்ததுடன் இது மிகையான திரவத் தன்மை நிலைமையையும் ஓரளவு பிரதிபலித்தது.

வாடிக்கையாளர் பணிகளுக்கு வசதியளிக்கும் நோக்குடன் இரு அரச வங்கிகள் உள்படப் பல வங்கிகள் அவற்றின் தொழிற்பாடுகளைக் கணனிமயப்படுத்தியதுடன் சில கிளைகளின் வங்கித்தொழில் நேரத்தையும் நீடித்துள்ளன.

**வங்கி விரிவாக்கம்**

வங்கிகள் பிரிவின் புதிய முறையொன்று 1985 இல் நிறுவப்பட்டது. பிரதேச, கிராமிய அபிவிருத்தி வங்கிகள் வெளியிடங்களில் மேலும் வங்கித் தொழில் பணிகளை மேம்மடுத்துவதனையும் அப்பகுதிகளில் உற்பத்தி நடவடிக்கைகளை அபிவிருத்தி செய்வதனையும் நோக்கமாகக் கொண்டு தொடங்கப்பட்டன. முதலாவது பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கி களுத்துறை மாவட்டத்திலுள்ள புளத்சிங்களவில் 1985 யூலை 13 ஆம் நாள் திறக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து மேலும் மூன்று வங்கிகள் குருநாகல், மாத்தறை, அநுராதபுரம் ஆகிய இடங்களில் திறக்கப்பட்டன. இதற்கமைய இவ்வாண்டுக் காலத்தில் பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் அவை தொடர்பான மாவட்டங்களுக்குள் 16 கிளைகளைத் திறந்தன. குருநாகலில் 6 கிளைகளும், மாத்தறையில் 5 கிளைகளும், அநுராதபுரத்தில் 2 கிளைகளும், களுத்துறையில் 3 கிளைகளும் காணப்பட்டன. மத்திய வங்கி அதன் மூன்றாவது பிரதேசக் கிளையை 1985 திசெம்பரில் மாத்தளையில் திறந்தது.

1985 இல் வர்த்தக வங்கிகளின் விரிவாக்க வீதம் மெதுவாகவே இருந்தது. மீள அமைக்கப்பட்ட வேளாண்மைப் பணி நிலைய கிளைகள் உட்பட வர்த்தக வங்கிக் கிளைகளின் மொத்த எண்ணிக்கை 1985 இறுதியில் 1,033 இற்கு 11 இனால் மட்டும் அதிகரித்தது. இலங்கை வங்கி அதன் புதிய தலைமையலுவலகத்தில் உள்ள சிறப்புத்தர கிளை உட்பட 1985 இல் 9 முதன்மைக் கிளைகளைத் திறந்த வேளையில் பாதுகாப்புக் காரணங்களுக்காக இரண்டு கிளைகளை மூடியது. ஏழு வேளாண்மைப் பணி நிலையங்களிலுள்ள கிளைகள் இவ்வாண்டுக் காலத்தில் முதன்மைக் கிளைகளாகத் தரம் உயர்த்தப்பட்டு அல்லது ஏற்கனவே இயங்கும் முதன்மைக் கிளைகளுடன் இணைக்கப்பட்டு மீள அமைக்கப்பட்டன. 1985 இறுதியில் இலங்கை வங்கி 236 தொழிற்படுகின்ற முதன்மைக் கிளைகளைக் கொண்டிருந்தது. மக்கள் வங்கி 3 புதிய கிளைகளைத் திறந்து ஒரு கிளையை மூடியவேளையில் இன்னொன்றினை வங்கி அலுவல்களுக்காக மீண்டும் திறந்தது. 1985 இறுதியில் இதன் கிளைகளினது மொத்த எண்ணிக்கை 293 ஆகக் காணப்பட்டது. இலங்கை

வர்த்தக வங்கிகளினுல் புதிய கிளைகள் எதுவும் திறக்கப்படவில்லே. எனினும் ஒரு கிளை அதாவது மாநகரக் கிளை, வெளிநாட்டுக் கிளை என இரண்டு துணைப் பிரிவாகப் பிரிக்கப்பட்டது.

மீளாய்விற்குரிய ஆண்டுப் பகுதியில் தேசிய சேமிப்பு வங்கி நான்கு புதிய கிளைகளைத் திறந்ததன் மூலம் இதன் கிளைகளினது மொத்த எண்ணிக்கை 1985 இறுதியில் 56 ஆகியது.

**வட்டி வீதங்கள்**


1985 ஆம் ஆண்டில் வட்டி வீத அமைப்பில் ஏற்பட்ட மாற்றங்கள் தேசிய சேமிப்பு வங்கியினதும், வர்த்தக வங்கிகளினதும் வைப்பு வீதங்களில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க வீழ்ச்சிகளையும், தெரிந்தெடுக்கப்பட்ட கடன் வழங்கல் வீதங்களில் ஏற்பட்ட சிறிதளவான குறைப்பையும் உள்ளடக்கியிருந்தன. கணிசமான திரவத் தன்மை நிலைமை, பணவீக்க வீதத்தில் ஏற்பட்ட குறைப்பு ஆகியவற்றின் காரண மாகத் தேசிய சேமிப்பு வங்கி ஒரு வருடத்திற்கான வைப்புக்கள் மீதான அதன் வைப்பு வீதங்களை ஆண்டிற்கு 18 இலிருந்து 16 சதவீதத்திற்குக் குறைத்ததுடன் வைப்பு வீதங்களில் குறைப்பினை ஏற்படுத்துவதற்கான வழியையும் மேற் கொண்டது. அதேவேளை மத்திய வங்கி ஏற்றுமதி மீள்நிதியிடல் திட்டங்களின் மீதான வங்கி வீதம் மற்றும் கடன் வழங்கல் வீதங்களைக் குறைத்தமை பணச் சந்தைக்கான அதன் வட்டி வீதக் கொள்கைக்கு ஒரு அடையாளமாக விளங்கி பணவீக்க வீதத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியினைக் கருத்திற் கொண்டு வர்த்தக வங்கிகள் வட்டிவீத மட்டங்களைக் கீழே கொண்டுவரத் தூண்டின.

இதன்படி 1985 பெப்புருவரி 1 ஆம் நாளிலிருந்தும் மீள்நிதியிடல் வீதமும் துணைநில் ஏற்றுமதிக் கொடுகடன் மீள்நிதியிடல் வசதியின் கீழான வங்கிகளின் கடன் வழங்கும் வீதமும் குறைக்கப்பட்டமையினுல் நடைமுறைக் கடன் வழங்கல் வீதம் ஒரு சதவீதத்தினுல் குறைக்கப்பட்டது.

தேசிய சேமிப்பு வங்கியின் வைப்பு வீதங்களின் குறைப்பு, மிகையான திரவத் தன்மை நிலைமை, பணவீக்க வீதத்தில் ஏற்பட்ட வீழ்ச்சி என்பன 1985 இன் முன்னரைப்பகுதியில் வர்த்தக வங்கிகளை அவற்றின் வைப்பு வீதங்களை 1–3 சதவீதப் புள்ளிகளைக் கொண்ட வீச்சினுல் குறைப்பதற்குத் தூண்டின. 1985 பெப்புரிவரியில் தேசிய சேமிப்பு வங்கி அதன் 12 மாத நிலையான வைப்பு வீதத்தினை ஆண்டிற்கு 18 இலிருந்து 15 சதவீதத்திற்கும் அதன் ஆறு மாத வைப்பு வீதத்தினை 14 இலிருந்து 13 சதவீதத்திற்கும் குறைத்தது. இதற்கமைய வர்த்தக வங்கிகளின் 12 மாத வைப்பு வீதங்கள் ஆண்டிற்கு 12 இலிருந்து 18 சதவீத வீச்சிற்கு வீழ்ச்சியடைந்தன. இதேபோன்று மத்திய வங்கியின் வட்டிவீதக் கொள்கைக்கும் வெளிப்படும் சந்தை நிலைமைகளுக்கும் இசைவாக இலங்கை வங்கியும், மக்கள் வங்கியும் 1985 ஏப்பிறலிலிருந்தும் தமது கடன் வழங்கல் வீதங்களை ஒவ்வொரு சத வீதப்புள்ளியால் குறைத்துக் கொண்டன. ஏனைய வர்த்தக வங்கிகளின் ஓராண்டிற்கான வைப்பு வீதங்கள் மாச்சு இறுதியில் ஆண்டிற்கு 14 இலிருந்து 22 சதவீத வீச்சிற்கும் 1985 இறுதியில் ஆண்டிற்கு 12 இலிருந்து 18 சத வீச்சிற்கும் படிப்படியாக வீழ்ச்சியுற்றன.

## வட்டி வீதங்கள்

காலாண்டு இறுதி எண்தொகைகள்




இலங்கை மத்திய வங்கி

ஆண்டின் பின்னரைப் பகுதியில், மிகையான திரவத் தன்மையை ஈர்க்கும் பொருட்டும் வைப்புக்கள் மற்றும் கடன் வழங்கல் வீதங்களைக் குறைப்பதற்கு வர்த்தக வங்கிகளைத் தூண்டும் பொருட்டும் மத்திய வங்கி வர்த்தக வங்கிகளின் வைப்புப் பொறுப்புக்கள் மீதான நியதி ஒதுக்கினை அதிகரித்தது. மேலும் வர்த்தக வங்கிகளின் நிதிச் செலவு அதிகரித்தமையின் விளைவாக அவை தொடக்கத்தில் வைப்பு வீதங்களையும் பின்னர் கடன் வழங்கும் வீதங்களையும் குறைப்பதற்கும் நிர்ப்பந்திக்கப்பட்டன. இதன் விளைவாக அனைத்து வர்த்தக வங்கிகளினதும் வைப்பு வீதங்களும் மேலும் ஒரு சதவீதத்தினுல் குறைக்கப்பட்டன. 1985 செத்தெம்பரில் அரச வங்கிகள் முக்கியமாக 1985 ஒத்தோபரில் நடைமுறைக்கு வந்த முன்னுரிமைக் கடன் வழங்கலின்மீது 1 தொடக்கம் 3 சதவீத புள்ளி வீச்சுக்களில் கடன் வழங்கல் வீதக் குறைப்பினை அறிவித்தன. ஏனைய வர்த்தக வங்கிகளின் கடன் வழங்கல் வீதங்கள் ஆண்டிற்கு 12 தொடக்கம் 33 சதவீத வீச்சுக்களிலிருந்து 1985 இறுதியில் ஆண்டிற்கு 11 தொடக்கம் 30 சதவீத வீச்சுக்களுக்கு மெதுவாக வீழ்ச்சியடைந்தன.

ஒத்தோபரில் தேசிய சேமிப்பு வங்கியின் வைப்பு வீதங்கள் ஆண்டிற்கு 16 சதவீதத்திலிருந்து 15 சதவீதத்திற்கு மேலும் குறைக்கப்பட்டதனைத் தொடர்ந்து வர்த்தக வங்கிகளின் வைப்பு வீதங்களும் வைப்புச் சான்றிதழ் வீதமும் கூட ஆண்டிற்கு 13 சதவீதம் தொடக்கம் 22.2 சதவீதம் வரையான வீச்சுக்களிலிருந்து ஆண்டிற்கு 8 சதவீதம் தொடக்கம் 20.5 சதவீத வீச்சுக்களுக்கு வீழ்ச்சியடைந்தது.

இவ்வாண்டுக் காலத்தில், நிதிக் கூட்டுநிலையங்களும் அவற்றின் வைப்பு வீதங்களைக் குறைத்துக் கொண்டன. எடுத்துக்காட்டாக இக்கூட்டு நிலையங்களின் ஓராண்டிற்கான நிலையான வைப்பு வீதங்கள் 1984 திசெம்பரில் ஆண்டிற்கு 21 தொடக்கம் 24 சதவீத வீச்சுக்களிலிருந்து 1985 இறுதியில் ஆண்டிற்கு 18 தொடக்கம் 22 சதவீத வீச்சுக்களுக்கு வீழ்ச்சியடைந்தது.

வர்த்தக வங்கிகளிலும் மற்றும் ஏனைய நிதி நிறுவனங்களிடையேயும் காணப்பட்ட மிகையான திரவத் தன்மையை ஓரளவு பிரதிபலிக்கும் வங்கிகளுக்கிடையிலான அழைப்புப் பணச்சந்தை வீதங்கள் 1984 இறுதியில் ஆண்டிற்கு 14 தொடக்கம் 15.50 சதவீதம் வரையான வீச்சுக்களிலிருந்து 1985 இறுதியில் ஆண்டிற்கு 11 தொடக்கம் 14 சதவீத வீச்சுக்களுக்கு வீழ்ச்சியடைந்தது.

நீண்டகால கொடுகடன் நிறுவனங்களிடையே இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம், மற்றும் இலங்கைத் தேசிய அபிவிருத்தி வங்கி ஆகியவற்றின் கடன் வழங்கல் வீதங்கள் மாற்றமின்றியிருந்தன. இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்தின் கடன் வழங்கல் வீதங்கள் ஆண்டிற்கு 11 இலிருந்து 14 சதவீத வீச்சுக்களுக்கிடையில் இருந்த வேளையில் தேசிய அபிவிருத்தி வங்கியின் கடன் வழங்கல் வீதங்கள் ஆண்டிற்கு 7 இலிருந்து 14 சதவீத அளவுகளுக்கிடையில் இருந்தன. அரச ஈட்டு முதலீட்டு வங்கியின் ஆகக் குறைந்த வீதம் ஆண்டிற்கு 12 சதவீதங்களிலிருந்து 10 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டமையினுல் அதன் கடன் வழங்கல் வீத வீச்சு ஆண்டிற்கு 10 இற்கும் 24 சதவீதத்திற்குமிடையில் கொண்டுவரப்பட்டது.

அதேவேளை, இவ்வாண்டுக் காலத்தில் இரண்டாந்தரத் திறைசேரி உண்டியல் சந்தையின் தொழிற்பாடுகள் விரிவடைந்தபொழுது மத்திய வங்கியின் சராசரி தேறிய விற்பனைகள் 1984 இன் ரூ. 10,130 இலட்சங்களிலிருந்து ரூ. 25,180 இலட்சங்களுக்கு அதிகரித்தது. எனினும் நிதிக்கான பருவகால தேவை காரணமாக 1985 இறுதியில் மத்திய வங்கியின் தேறிய விற்பனைகள் ரூ. 15,290 இலட்சங்களுக்கு வீழ்ச்சியடைந்தது.

1985 இன் பின்னரைப் பகுதியில் திறைசேரி உண்டியல்களின் (முதலாந்தர, இரண்டாந்தர) வட்டி வீதம் பல தடவைகள் வீழ்ச்சியுற்றன. அத்துடன் 1985 இன் இறுதிப் பகுதியில் மத்திய வங்கியின் வங்கி வீதமும், பெரும்பாலான மீள் நிதியிடல் வீதங்களும் இரண்டு சதவீதப் புள்ளிகளினால் கீழ்நோக்கித் திருத்தப்பட்டன. (இம்மாற்றங்கள் பற்றிய விபரங்கள் நாணயக் கொள்கைப் பிரிவின் கீழ் ஆராயப்பட்டுள்ளன).

## மத்திய வங்கித் தொழில்

1985 இறுதியில் மத்திய வங்கியின் மொத்தச் சொத்துக்கள்/பொறுப்புக்கள் ரூ. 411,590 இலட்சங்களாக அமைந்து 1984 இன் சிறிதளவு அதிகரிப்பான ரூ. 1,750 இலட்சங்களுடன் (0.5 சதவீதம்) ஒப்பிடுகையில் ரூ. 78,870 இலட்சம் (24 சதவீதம்) கொண்ட குறிப்பிடத்தக்கதொரு அதிகரிப்பினைக் காட்டியது.

சொத்துக்கள் பக்கத்தில், 1984 இல் ரூ. 53,170 இலட்சத்தினால் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்த மத்திய வங்கியின் பன்னாட்டு ஒதுக்கு (மொத்தம்) 1985 இல் ரூ. 11,340 இலட்சத்தினால் (9 சதவீதம்) வீழ்ச்சியடைந்தமைக்கு வெளிநாட்டிலுள்ள காசு, மற்றும் நிலுவை உடமைகள் ரூ. 15,150 இலட்சங்களினால் வீழ்ச்சியடைந்தமையே முக்கிய காரணமாகும். அதேவேளை வெளிநாட்டுப் பிணைகள் மற்றும் திறைசேரி உண்டியல்கள் ரூ. 3,840 இலட்சத்தினால் அதிகரித்தன.

மாறாக, 1984 இல் ரூ. 47,770 இலட்சத்தினால் வீழ்ச்சியடைந்த மத்திய வங்கியின் உள்நாட்டுச் சொத்துக்கள் 1985 இல் ரூ. 73,760 இலட்சத்தினால் கணிசமாக அதிகரித்தன. இதற்கு முக்கிய காரணம் திறைசேரி உண்டியல் உடைமைகள் ரூ. 73,370 இலட்சத்தினால் பெருமளவில் அதிகரித்தமையாகும். வர்த்தக வங்கிகளுக்கும் ஏனைய நிதி நிறுவனங்களுக்குமான முற்பணங்கள் ரூ. 1,750 இலட்சத்தினால் வீழ்ச்சியடைந்தமை குறுங்காலக் கடன்கள் ரூ. 2,180 இலட்சத்தினால் வீழ்ச்சியடைந்தமை, நடுத்தர, நீண்டகால கொடுகடன்களில் ரூ. 430 இலட்சங் கொண்ட சிறிதளவு அதிகரிப்புக் காணப்பட்டமை என்பன வற்றின் இணைந்த விளைவாகும். மீள் நிதியிடல் திட்டங்களின் கீழ் வழங்கப்பட்ட குறுங்கால முற்பணங்களில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு முக்கியமாக ஏற்றுமதி மீள் நிதியிடல் வசதிகளின் கீழான நிதிக்குக் காணப்பட்ட குறைந்த கேள்வியே முக்கிய காரணமாகும். இவ்வாண்டுக் காலத்தில் மத்திய வங்கியின் ஏனைய சொத்துக்களும் கணக்குகளும் ரூ. 16,850 இலட்சங்களினால் அதிகரித்தது. இது முக்கியமாக ஐ.அ. டொலர்களின் முன் மாற்று விற்பனைகள் (ரூ. 5,050 இலட்சம்) ஐ.அ. டொலர்களின் முன் மாற்றுக் கொள்வனவுகள் (ரூ. 3,160 இலட்சம்) மத்திய வங்கியால் வழங்கப்பட்ட உத்தரவாதங்கள் (ரூ. 2,390 இலட்சம்) ஆகியவற்றில் ஏற்பட்ட அதிகரிப்புக்களின் விளைவாகும்.

பொறுப்புக்கள் பக்கத்தில், சுற்றேட்டத்திலுள்ள நாணயம் மற்றும் வைப்புக் களை உள்ளடக்கிய நாணயப் பொறுப்புக்கள் 1985 இல் ரூ. 35,950 இலட்சத் தினுல் (17 சதவீதம்) அதிகரித்தன. அரசு, வர்த்தக வங்கிகள், ஏனையவர்களின் வைப்புக்கள் முறையே ரூ. 7,760 இலட்சம், ரூ. 14,650 இலட்சம், ரூ. 6,010 இலட்சங்களினுல் அதிகரித்த வேளையில் பன்ஞட்டு அமைப்புக்கள், வெளிநாட்டு அரசுகள், வெளிநாட்டு வங்கித் தொழில் நிறுவனங்களின் வைப்புக்கள் ரூ. 9,670 இலட்சத்தினுல் வீழ்ச்சியடைந்தன. வர்த்தக வங்கிகளின் வைப்புக்கள் குறிப்பிடத் தக்களவில் அதிகரித்தமைக்கு 1984 இல் இருந்தும் நடைமுறைக்கு வந்த நியதி ஒதுக்கு விகிதத்தில் ஏற்பட்ட அதிகரிப்புக்களே முக்கிய காரணமாகும். அரசின் கடன்பாடுகளில் ஒரு பகுதி வைப்புக்கள் வடிவில் மத்திய வங்கியுடன் தடுத்து வைக்கப்பட்டமையின் காரணமாக அரசின் வைப்புக்கள் உயர்வடைந்தன. வெளி நாட்டு அமைப்புக்களின் வைப்புக்களில் ஏற்பட்ட வீழ்ச்சி பன்ஞட்டு நாணய நிதியக் கணக்கினது வைப்புக்களில் ஏற்பட்ட வீழ்ச்சியில் முக்கியமாகப் பிரதி பலிக்கப்பட்டது.

இவ்வாண்டுக் காலத்தில் மத்திய வங்கிப் பிணைகளின் எட்டு வழங்கல்கள் காணப்பட்டன. ஆகவே வெளிநிற்கும் மத்திய வங்கிப் பிணைகள் 1984 இறுதியில் ரூ. 5,570 இலட்சங்களிலிருந்து 1985 இறுதியில் ரூ. 11,680 இலட்சங்களுக்கு உயர்வடைந்தது. அதேவேளை பன்ஞட்டு ஒதுக்கு மீள் மதிப்பிடல் கணக்கு ரூ. 14,740 இலட்சத்தினுல் அதிகரித்தமையின் முக்கிய காரணமாக மத்திய வங்கியின் ஏனைய பொறுப்புக்களும் கணக்குகளும் ரூ. 36,870 இலட்சத்தினுல் அதிகரித்தன. இலாப நட்டக் கணக்குகள், ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியக் கணக்கு களின் நிலுவை, கட்டுப்பாட்டுக் கணக்கு ஒதுக்குகள் ஆகியவற்றில் ஏற்பட்ட அதிகரிப்புக்களும் ஏனைய பொறுப்புக் கணக்குகளில் ஏற்பட்ட அதிகரிப்பிற்குக் காரணமாக இருந்தன.

**நாணயக் கொள்கை**

பணநிரம்பலின் மீது வெளிநாட்டு வங்கித் தொழில் சொத்துக்களினுல் (தேறிய) ஏற்படுத்தப்பட்ட சுருக்கத் தாக்கம் வங்கித் தொழில் முறையிலிருந்தான அரசின் கடன்பாடுகளில் ஏற்பட்ட மிகக் கூடியளவு அதிகரிப்பினுல் மிகக் கூடியள வில் எதிரீடு செய்யப்பட்டது. 1985 காலப்பகுதியில் பொருளாதாரத்திலுள்ள திரவத் தன்மை நிலைமையைச் சமாளிப்பதற்காக 1984 இல் அறிமுகப்படுத்தப் பட்ட கட்டுப்பாடான நாணயக் கொள்கைத் தொகுப்பினை மத்திய வங்கி தொடர்ந்தும் பின்பற்றியது. உறுதி, வளர்ச்சி ஆகிய இரு குறிக்கோள்களுக் கிடையில் சமநிலையைப் பேணுவதற்காகக் கேள்வி முகாமையை நோக்கி நெறிப் படுத்தப்பட்ட கொள்கை வழிமுறைகளைக் கொண்ட பொதுவான சூழ்நிலைகளுடன் துணைநில் தெரிந்தெடுக்கப்பட்ட வழிமுறைகளும் பின்பற்றப்பட்டன. 1985 இன் பின்னரைப் பகுதியில் குறிப்பாகக் கணிசமான மட்டங்களுக்கு உயர்ந்த உண்மை வட்டி வீதங்களுக்கு மாருக விலைகள் வீழ்ச்சியடைந்த பின்னணியில் வர்த்தக வங்கிகளின் முற்பணங்களின் மீதான வட்டி வீதங்களின் மட்டங்களைக் குறைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

1985 காலப்பகுதியில் மத்திய வங்கியின் கொடுகடன் கொள்கைகள் முன் னுரிமைத் துறைகளை நோக்கிக் கொடுகடன்களை வழிப்படுத்தியதுடன் முன்னுரிமை யல்லாத துறைகளுக்கான கொடுகடன் விரிவையும் கட்டுப்படுத்தியது. இதற் கிணங்க முன்னுரிமையல்லாத இறக்குமதிகளுக்கான வர்த்தக வங்கிக் கொடு

கடன்களின் மீது விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளை நிதிக்கூட்டு நிலையங்களின் கடன் வழங்கலின் மீதும் விரிவாக்கியதன் மூலம் மேலும் வலுவாக்கப்பட்டன. 1985 சனவரி 21 ஆம் நாளிலிருந்தும் இன்றியமையாததல்லாத பொருட்களின் இறக்கு மதிக்காக வழங்கப்பட்ட நிதிக்கூட்டு நிலையங்களின் கடன்களும் முற்பணங்களும் 1985 சனவரி 18 ஆம் நாள் வழங்கப்பட்டு வெளிநிற்கும் அத்தகைய முற்பணங் களை விஞ்சக் கூடாது என அறிவிக்கப்பட்டது. மேலும் நிதிக்கூட்டு நிலையங்களின் கடன் வழங்கல் இயலாற்றலும் உயர்ந்த திரவ விகிதம் விதிக்கப்பட்டதன் மூலம் மேலும் கட்டுப்படுத்தப்பட்டது. 1985 யூன் 1 ஆம் நாளிலிருந்து நிதிக்கூட்டு நிலையங்களின் எந்தவொரு குறிப்பிட்ட நாளிலும் பெறப்பட்டு வெளிநிற்கும் வைப்புக்களில் 15 சதவீதத்தினைத் திரவச் சொத்து விகிதமாகப் பேணுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டன.

மரபுவழியற்ற ஏற்றுமதித்துறைக்கு மேலும் சலுகைகளை வழங்கும் நோக் குடன் மரபுவழியற்ற ஏற்றுமதிகளுக்கான துணைநில் மீள்நிதியிடல் வசதிகளின் மீள்நிதியிடல் கடன் வழங்கல் வீதங்கள் குறைக்கப்பட்டன. 1985 பெப்புருவரி 1 ஆம் நாளிலிருந்தும் மீள்நிதியிடல் வீதங்கள் ஆண்டிற்கு 8.75 இலிருந்து ஆண்டிற்கு 7.8 சதவீதத்திற்கும் மீண்டும் கடன் வழங்கல் வீதங்கள் ஆண்டிற்கு 12.75 இலிருந்து 11.8 சதவீதத்திற்கும் குறைக்கப்பட்டன. அதேவேளை தனியார் துறையின் அபிவிருத்திச் செயற்றிட்டங்களுக்கு நீண்ட கால மூலதனத்தை வழங் கும் பொருட்டு 1985 யூனில் வர்த்தக வங்கிகள் இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்தின் முறிகள் வடிவில் தேவையான ஒதுக்குகளில் ஒரு பகுதியைப் பேணுவதற்கு அனுமதிக்கப்பட்டன. இது ஒவ்வொரு வர்த்தக வங்கிகளினாலும் இவ்வாறு பேணப்பட்ட ஒதுக்குகளின் அளவு தவணை, சேமிப்பு வைப்புப் பொறுப் புக்களின் மீதான அவற்றின் ஒதுக்கில் எட்டிலொன்றிற்குச் சமமான தொகையை விஞ்சலாகாது என்ற நிபந்தனைகட்குட்பட்டதாகும். இது இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்தின் திரவ அடிப்படையை வலுவாக்கிய அதேவேளை அத்தகைய முறிகளின் மீதான வட்டி வருமானத்தை உழைப்பதற்கு வர்த்தக வங்கிகள் அனுமதிக்கப்பட்டன. 1985 இறுதியில் இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்தின் முறிகள் மீதான வர்த்தக வங்கிகளின் முதலீடு ரூ. 3,330 இலட்சமாக விளங்கியது.

1984 நடுப்பகுதியில் வர்த்தக வங்கிகளின் வைப்பு வீதங்களில் குறைப்புக்கள் காணப்பட்டபோதும் 1985 செத்தெம்பர் வரை வர்த்தக வங்கிகளின் கடன் வழங்கல் வீதத்தில் குறிப்பிடத்தக்க மாற்றங்களெதுவுமில்லை. மிதமான திரவத் தன்மையை ஈர்த்துக் கொள்ளும் நோக்குடன் வைப்புப் பொறுப்புக்களின் மீதான நியதி ஒதுக்கு வீதங்கள் 1985 ஓகத்து, செத்தெம்பர்களில் மேலும் உயர்த்தப் பட்டன. சேமிப்பு, கேள்வி வைப்புக்களின் விகிதங்கள் முறையே 8 இலிருந்து 10 சதவீதமாகவும் 16 இலிருந்து 18 சதவீதமாகவும் உயர்த்தப்பட்டது. மிகக் குறுங்கால தவணை வைப்பு உடமைகளிலிருந்தும் வங்கிகளை ஊக்கமிழக்கச் செய்யும் நோக்குடன் ஒவ்வொரு குறுகிய கால வரையறைக்குட்பட்ட 90 நாட்களை விஞ்சாத தவணை வைப்புக்கள் தொடர்பான விகிதங்கள் இரு தடவை களில் (ஓகத்திலும், செத்தெம்பரிலும்) 8 இலிருந்து 14 சதவீதத்திற்கு உயர்த்தப் பட்ட வேளையில் 90 நாட்களை விஞ்சிய வைப்புக்களின் வீதங்கள் 8 இலிருந்து 10 சதவீதமாக உயர்த்தப்பட்டது.

திரவ நிலைமை, பணச் சந்தை வீதங்களில் ஏற்பட்ட வீழ்ச்சி, பணவீக்க வீதத்தில் ஏற்பட்டுள்ள மெதுவான போக்கு ஆகியனவற்றைக் கருத்திற் கொண்டு 1985 ஒகத்தில் மத்திய வங்கி, அரச பிணைகளுக்கான வட்டி வீதங்களை 16 இலிருந்து 14 சதவீதமாகக் குறைத்ததுடன் முதிர்ச்சிக் காலம் தொடர்ந்தும் 6 வருடங்களாகவே மாறாதிருக்க வேண்டுமென அரசுக்கு விதந்துரைத்தது. இதன் விளைவாக திறைசேரி உண்டியல் வீதங்களும் (முதலாந்தர, இரண்டாந்தர) 1985 செத்தெம்பர் முதல் பல தடவைகள் குறைக்கப்பட்டன. இதற்கமைய 1985 இல் முதலாந்தர உண்டியல்களின் வீதம் ஆண்டொன்றுக்கு 14 இலிருந்து 11.5 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்ட வேளையில், இரண்டாந்தர திறைசேரி உண்டியல்களின் வாங்கும் விற்கும் வீதங்கள் ஆண்டொன்றிற்கு முறையே 14.2, 14.0 சதவீதத்திலிருந்து ஆண்டொண்றுக்கு 11.5, 11.3 சதவீதமாகக் குறைக் கப்பட்டது.

இதேவேளை முன்னுரிமை நோக்கங்களுக்கான கடன் வழங்கும் வீதங்களைக் குறைக்கும் குறிக்கோளுடன் மத்திய வங்கி 1985 திசெம்பர் 30 ஆம் நாளன்று வங்கி வீதத்திலும் (அதாவது 13 இலிருந்து 11 சதவீதத்திற்கு) பயிர்ச்செய்கை சந்தைப்படுத்தல் வசதிகளுக்குமான மீள் நிதியிடல் வீதம் தவிர வர்த்தக வங்கிகளுக்கும் மற்றைய பங்கேற்கும் நிறுவனங்களுக்கும் கிடைக்கத்தக்கதான அனைத்து மீள் நிதியிடல் வீதங்களிலும் இரண்டு சதவீதப் புள்ளி கொண்ட குறைப்பை அறிவித்தது. இக் குறைப்புக்கள் வர்த்தக வங்கிகளைக் கடன் கொடுக் கும் வீதங்களைக் குறைப்பதற்குத் தூண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (இந்த மாற்றங்கள் பற்றிய விபரங்களை இவ்வறிக்கையின் பகுதி 11 இல் காண லாம்).

1985 இற்கான தேசிய கொடுகடன் திட்டம் தனியார் துறைக்கு வர்த்தக வங்கிகளினால் விதிக்கப்பட்ட கொடுகடன் உச்ச எல்லைகளின் பின்னணிக்கு மாறாக உருவாக்கப்பட்டிருப்பதுடன் கொடுகடன் உச்ச எல்லைகளில் இருந்து விதி விலக்குப் பெற்ற துறைகளுக்கு (முக்கியமாக ஏற்றுமதிகளும் வேளாண்மையும்) கூடியளவு கடன் வசதிகளை வழிப்படுத்த வழிவகுத்தன. 1985 இல் நாணய அளவீடு உருவாக்கப்பட்ட பின்னர் அனைத்து வர்த்தக வங்கிகளினதும் தனியார்துறைக்கு வழங்கப்பட்டு 1985 இறுதியில் வெளிநிற்கும் கொடுகடனின் அனுமதிக்கத்தக்க மட்டம் 1985 இன் தொடக்கத்தில் ரூ. 388,070 இலட்சங்களில் இலக்கிடப் பட்டது. இது 1984 இல் இலக்கிடப்பட்ட ரூ. 51,290 இலட்சம் அல்லது 16 சதவீத அதிகரிப்புக்கு மாறாக ரூ. 34,350 இலட்சம் அல்லது 10 சதவீத அதிகரிப்பினைக் கொண்டிருந்தது. இதேவேளையில் வேளாண்மை, ஏற்றுமதிகள் கைத்தொழில் என்பன கொடுகடன் துறைவகைப்படியான ஒதுக்கீடுகளில் தொடர்ந்தும் முன்னுரிமைப் பகுதியாக விளங்கின.

1984 இல் அறிமுகப்படுத்தப்பட்ட கொடுகடன் உச்ச எல்லைகள் தொடர்ந் தமையும், இவ்வாண்டுக் காலப்பகுதியில் அறிமுகப்படுத்தப்பட்ட ஏனைய கட்டுப் பாடான நாணயக் கொள்கை வழிமுறைகளும் காலாண்டிற்கான ஆரம்ப இலக்கு களுடன் ஒப்பிடுகையில் ஆண்டின் அனைத்து நான்கு காலாண்டு முழுவதற்குமான கொடுகடனில் வீழ்ச்சியை விளைவித்தன. 1985 இறுதியில் தனியார் துறைக்கான மொத்த வெளிநின்ற கொடுகடனின் தொடக்க இலக்கான ரூ. 388,070 இலட் சத்துடன் ஒப்பிடுகையில் ரூ. 382,230 இலட்சமாக விளங்கி ரூ. 5,840 இலட்சம் அல்லது 2 சதவீதச் சிறு குறைப்பினைக் காட்டியது. இச் சிறு வீழ்ச்சியானது செத்தெம்பர் இறுதியில் வழங்கப்பட்ட உண்மையான கொடுகடன் இலக்கினைவிட

ரூ. 11,620 இலட்சத்திற்குப் பின்னடைந்ததன் மூலம் தெளிவாயிற்று. எனினும் கொடுகடனிற்கான உயர்வடைந்த பருவகாலக் கேள்விகளினால் 1985 இறுதிப் பகுதியில் இந்த இடைவெளி குறைவடைந்தது. கொடுகடன் உச்ச எல்லைகளிலிருந்து ஏற்றுமதிகள் மற்றும் வேளாண்மைக்கான கொடுகடன்கள் நீக்கப்பட்டுள்ள போதும் இத்தகைய நோக்கங்களுக்காக வழங்கப்பட்ட வெளிநின்ற கொடுகடன்கள் ஆண்டு முழுவதிலும் இலக்கிற்குப் பின்னடைந்தே இருந்தன. ஏற்றுமதிக் கொடுகடன்களின் குறைக்கப்பட்ட பயன்பாடுகள் பெருமளவுக்கு ஏற்றுமதி விலைகளின் குறிப்பாகத் தேயிலையின் ஏற்றுமதி விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சியின் காரணமாக ஏற்பட்டதாகும். வேளாண்மைக் கொடுகடனின் குறைவான பயன்பாட்டிற்கு நெல் கொள்வனவில் நெற் சந்தைப்படுத்தற் சபை கொண்டிருந்த வரையறுக்கப்பட்ட பங்கும் 1984/85 பெரும்போகத்திலும் 1985 சிறுபோகத்திலும் அனைத்தையும் உள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கடன்களின் துரித வீழ்ச்சியும் முக்கிய காரணங்களாகும்.

தொடர்ச்சியான கொடுகடன் கட்டுப்பாடுகள் மத்திய வங்கியின் பிணை வழங்கல்கள் உயர்ந்த செலவுக் கடன்பாடுகள் என்பன 1985 இல் தனியார் துறைக் கொடுகடனின் வருடாந்த வளர்ச்சியை 1985 ஆம் ஆண்டின் இறுதியில் 9 சதவீதத்திற்குக் கட்டுப்படுத்தின. இது 1984 இறுதியில் தனியார் துறைக் கொடுகடன்களின் ஆண்டு வளர்ச்சியான 11 சதவீதத்துடன் ஒப்பிடத்தக்கது. எனினும் அரசின் கடன்பாடுகள் 1984 இறுதியில் 17 சதவீத எதிர்க்கணியத்திலிருந்து 42 சதவீதம் கொண்ட நேர்க் கணியத்திற்குக் கூடியளவில் அதிகரித்தமையின் காரணமாக, உள்நாட்டுக் கொடுகடன் 1 சதவீதத்திலிருந்து 1985 இறுதியில் 19 சதவீதத்திற்கு அதிகரித்தது.

1985 இன் விலைப்போக்குகளின் முக்கிய தன்மை யாதெனில் நுகர்வோர் விலைகளின் வீழ்ச்சிப் போக்கேயாகும். கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் அதிகரிப்பானது புள்ளிக்குப் புள்ளி என்ற அடிப்படையில் 1984 இன் இறுதியில் 9.5 சதவீதத்திலிருந்து 1985 இல் 1.5 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் ஆண்டுச் சராசரி 1984 இன் 17 சதவீதத்திலிருந்து 1985 இல் 1.5 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. வழங்கல் நிலைமைகளில் முக்கியமாக உணவு விடயங்களில் ஏற்பட்ட முன்னேற்றம் மத்திய வங்கியினால் பின்பற்றப்பட்ட தொடர்ச்சியான கட்டுப்பாடான நாணயக் கொடுகடன் கொள்கை வழிமுறைகளுடன் இணைந்து இச்சாதகமான விலை முன்னேற்றங்களை விளைவித்தது.